## ஆளுநர் பதவி தேவையற்றது என்பதே

# நாட்டு மக்கள் இன்று பெற்றுள்ள பாடமும் - படிப்பினையும்!

இந்திய அரசியல்சட்ட அமைப்புக் குழுவின் (Constituent Assembly) தலைவராக இருந்த பாபு ராஜேந்திர பிரசாத் தலைமையில் இந்திய அரசியல்சட்ட வரைவினை பிரிவுவாரியாக ஆய்வுசெய்யும் கூட்டம் 30/31.05.1949ல் தொடங்கியது. இந்தக் கூட்டத்தில்தான் மாநில ஆளுநர்கள் குறித்த அவசியம், ஆளுநர்களின் நியமன முறைகள், அதிகாரங்கள், ஆளுநர் நியமனங்களுக்கான நோக்கங்கள் ஆகியவற்றின் சாதகபாதகங்கள் விரிவாக விவாதிக்கப்படுகிறது.

அந்த விவாதத்தில் குறிப்பாக, பீகார் மாநிலத்தைச் சேர்ந்த டாக்டர்.பி.கே.சென் (Dr.P.K.Sen - Bihar General) பிஸ்வநாத்தாஸ் (Shri Biswanath Das - Orissa General) ஆகியவர்களின் கருத்துரைகளும், அவர்களது அச்சங்களும், இன்றைய சூழ்நிலையில் கவனத்தில் எடுத்துக் கொண்டு சிந்திப்பதும், சிந்தனைகளின் அடிப்படையில் உருவாகும் காலத்தால் பொருத்தமான கருத்துகளுக்கு வடிவம் கொடுப்பதும் இந்திய அரசியல்சட்டத்தை இன்றும், என்றும் உயிரோட்டமுள்ளதாக வைத்துக்கொள்வதற்கும், பயன்படுத்துவதற்கும் ஏற்புடையதாக இருக்கும்.

இந்தக் கருத்துகளை அடித்தளமாகக் கொண்டுதான் தமிழ்நாடு முதல்வர், ஆளுநரால் திருப்பி அனுப்பப்பட்ட 10 மசோதாக்களை திரும்பவும் சட்டப்பேரவையில் நிறைவேற்றும் தீர்மானத்தை முன்மொழிந்த பொழுது, நாட்டுக்கும், நல்லாட்சிக்கும், ஒன்றிய - மாநிலங்கள் நல்லுறவுக்கும் சாலப்பொருத்தமான கருத்துகளை நடுநிலையோடு அனைவரும் ஏற்றுக்கொள்ளத் தக்க வகையிலும், முறையிலும் சுருக்கமாக இப்படி முன்வைத்தார்கள்: “ஆளுநர் பதவி என்பதே அகற்றப்படவேண்டிய பதவியாக இருந்தாலும் - அது இருக்கும் வரை மக்களாட்சித் தத்துவத்திற்கு அடங்கியிருப்பது தான் மரபு ஆகும்”, என்று உயர்ந்த அரசியல் நாகரிகத்துடன், அனைவரும் பாராட்டத்தக்கவகையில் அவைமுன் எடுத்துவைத்தார்கள்.

இன்றைய தமிழ்நாடு ஆளுநரின் நடவடிக்கைகள் எந்த அளவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுக்கு தடுப்புச் சுவராக இருக்கிறதோ, இந்த நிலைமைகள் ஆளுநரால் உருவாக்கப்படலாம் என்பதை முன்கூட்டியே சிந்தித்து, அன்றையதினம் அரசியல்சட்ட நிர்ணயசபையில் வாதங்களை எடுத்து வைத்துள்ளார்கள். குறிப்பாக, மேலே குறிப்பிட்ட 31.05.1949ம் தேதிய விவாதத்தில் கலந்துகொண்ட ஒரிசா மாநிலத்தைச் சார்ந்த பிஸ்வநாத் தாஸ், மாநில ஆளுநர் நியமனம் குறித்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் பொழுது, “ஜனநாயகமும், எதேச்சாதிகாரமும் ஒரே நேரத்தில், ஒரே இடத்தில் செயல்பட இயலாது. மேலும், இந்த அரசியல் அமைப்பின்படி, ஜனநாயகத்தை கட்டைவிரல் தொடங்கி கழுத்துவரையில் செயல்பட வழி வகுத்துக் கொடுத்துள்ள நிலையில், தலையில் எதேச்சாதிகாரம் செயல்பட வாய்ப்பை உருவாக்கி வைத்துள்ளீர்கள்”, என்று குறிப்பிட்டுள்ளார் (You cannot have democracy and autocracy functioning together. In the provinces you are going to have democracy from toe to neck and autocracy at the head. Draft Constitution Page No.447, Vol. No.VIII). இன்று தமிழ்நாட்டு ஆளுநரின் நடவடிக்கை இங்கு குறிப்பிட்ட கருத்தின் பிரதிபலிப்பாகத்தானே இருக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநித்துவ சபையில் தீர்மானங்களாக, ஒருமனதாக வார்ப்பிக்கப்பட்ட மசோதாக்கள், சட்டங்களாகும் கட்டத்தில் ஆளுநர் காரணமின்றி தடையை ஏற்படுத்தித் தடுக்கிறார் என்றால், அவரது நடவடிக்கை எதேச்சாதிகாரம் (Autocracy) என்று தானே கருதமுடியும்?



**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்

இந்திய அரசியல்சட்ட அமைப்பு கூட்ட விவாதத்தில் 30.05.1949ஆம் நாள் கலந்துகொண்ட உறுப்பினர்கள் குறிப்பாக தமிழ்நாட்டைச் சார்ந்த புகழ்பெற்ற வழக்கறிஞர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், ஆளுநரின் பணி எப்படி இருக்க வேண்டும் என்பதை ஓர் ஒப்பீட்டின் மூலம் விளக்குகிறார் : “ஆளுநர் என்பவர் அரசியல் சட்டப்படி மாநில நிர்வாகத்திற்கு தலைமை ஏற்பவர். மேலும், மாநில அரசாங்கத்திற்கு நல்ல ஆலோசனைகளை வழங்கும் ஆற்றலாளராகவும், நேர்மையானவராகவும் இருப்பதோடு, மாநில அரசுக்கு எத்தகைய கொந்தளிக்கும் பிரச்சனைகள் வந்தாலும் அவற்றை அடக்கி அமைதிப்படுத்தும் ஆற்றல் உள்ளவராகவும் இருக்க வேண்டுமென்கிறார் (The central fact to be remembered is that the Governor is to be a Constitutional head, a sagacious counselor and advisor to the Ministry one who can throw oil over troubled waters [Draft Constitution Page No.431432, Vol No.VIII, Shri Alladi Krishnasamy Ayyar]).

அன்றைய அரசியல்சட்ட நிர்ணயசபையில் அங்கம் வகித்த தமிழ்நாட்டின் தலைசிறந்த வழக்கறிஞர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் அவர்களின் நியாயமான கருத்துகளுக்கு எந்தவகையிலாவது பொருத்தமுள்ளவராக தமிழ்நாடு ஆளுநர் தன் நடவடிக்கைகளின் மூலம் எந்தக் கட்டத்திலே யாவது நிரூபித்துள்ளாரா என்றால், மாறாக ஆளுநர் ரவியால்தான் பிரச்சினைகளே உருவாக்கப்படுகின்றன என்பதை விளக்கிடத் தேவையில்லை. 31.05.1949ஆம் நாள் அரசியல்சட்ட நிர்ணயசபை விவாதத்தில் கலந்துகொண்ட பீகார் மாநிலத்தைச் சார்ந்த டாக்டர் பி.கே.சென், மாநில ஆளுநர் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, “மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் குறுக்கீடு செய்யாமல், தன்னை பிரச்சனைகளிடமிருந்து தனிமைப்படுத்திக் கொள்ளவேண்டும்”, என்று குறிப்பிடுகிறார் (Ordinarily however, his function is not to interface but to remain detached..., Draft Constitution Page No.445, Vol No.VIII, Dr.P.K.Sen).

மாநிலங்களின் ஆளுநர்கள் எப்படித் தங்கள் கடமையினை நிறைவேற்றவேண்டும், அரசியல்சட்டத்தின் நோக்கம் என்ன என்பது பற்றியெல்லாம் தீர்க்கமாக இந்திய அரசியல்சட்ட நிர்ணயசபையில் அரசியல்சட்ட நிபுணர்களும், சட்ட வல்லுநர்களும் விவாதித்து ஆளுநர்களுக்கு வழிகாட்டும் நெறிகளாகத் தந்துள்ளார்கள். அவர்களின் ஆலோசனைகளையும், வழிகாட்டுதலையும் காற்றில் வீசிவிட்டு, அரசியல்சட்டத்தின் மூலமாகப் பெற்ற அதிகாரங்களையும் தாண்டி அதிகார ஆக்கிரமிப்பில் ஈடுபட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தைச் செயல்பட விடாமல் தடுக்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபடுவாரேயானால், அந்த ஆளுநர் பொறுப்பு தேவையற்றது, அவசியமில்லாதது என்ற தீர்க்கமான முடிவிற்குதான் வரவேண்டும்.

இந்திய அரசியல்சட்டம் அமலாக்கம் செய்யப்பட்ட 26.01.1950 முதல் ஒவ்வொரு மாநில அரசுக்கும் சங்கடங்களையும், தடைகளையும் உருவாக்கும் நிரந்தரத் தொழிற்சாலையாகவே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது கடந்தகால அனுபவமாகும். குறிப்பாக எதிர்க்கட்சிகள் ஆட்சி நடைபெறும் மாநிலங்களில், அந்த மாநிலங்களில் அரசு நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடுவதும், முனை முறிப்பதும், சிதைப்பதும், சின்னாபின்னமாக்குவதும், இன்றைய ஆளுநர்களின் திட்டமிட்ட பணி அட்டவணையாக இருக்கிறது. ஜனநாயகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிக்கு எதிரான நடவடிக்கைகளில் ஆளுநர் ஈடுபடுவதென்பது இந்திய ஜனநாயகத்திற்கு விடப்படும் சவாலாகவே கருதவேண்டும். ஆளும் வாய்ப்பைப் பெற்ற ஆட்சிக்கட்சி தவறிழைக்குமானால், மக்கள் அதற்குரிய தண்டனை வழங்குவார்கள், அதுமட்டுமல்ல; இந்திய அரசியல்சட்டப்படி ஒன்றிய - மாநில அரசுகள் நடைபெறுகிறதா என்பதைக் கண்காணிக்கும் பொறுப்பும், தவறுகளுக்கு தண்டனை வழங்கும் அதிகாரங்களும் உயர் நீதிமன்றங்களுக்கும், உச்ச நீதிமன்றங்களுக்கும் அரசியல்சட்டப்படியே உண்டு என்ற எதார்த்த நிலை இருக்கும்பொழுது, ஆளுநரின் அத்துமீறிய அடாவடித்தனம் ஆட்சியின் நடவடிக்கைகளைப் பாதிக்காதா? அதன் மூலம் மக்கள் பாதிக்கப்படமாட்டார்களா? என்பதுதான் இன்று மக்கள் மத்தியில் பூதாகரமாக எழுந்துள்ள கேள்வியாகும்.

எதிர்க்கட்சிகள் ஆட்சிப்பொறுப்பில் இருக்கும் தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில் மட்டும் ஆளுநர்கள் அந்தந்த தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளுக்கு முரண்பாடாகச் செயல்படுகிறார்கள் என்றால், அந்த மாநிலங்களில் ஒன்றியத்தில் ஆட்சிப்பொறுப்பிலிருக்கும் பாரதீய ஜனதாக்கட்சிக்கு எதிரான அரசியல் கட்சிகள் ஆட்சிப் பொறுப்பில் உள்ளார்கள் என்பதுதான் ஒரே காரணமாகும். எதிர்க்கட்சிகள் ஆட்சியில் உள்ள மாநிலங்களில் மட்டும் பொறுப்பில் உள்ள ஆளுநர்கள் தொடர்புடைய மாநில ஆட்சிகளுக்கு முரண்பட்டுச் செயல்படுகிறார்கள் என்றால், ஒன்றிய அரசுக்குத் தெரியாமல் நடைபெறவுமில்லை, அதுமட்டுமல்ல; ஒன்றிய அரசினுடைய ஆதரவுடன்தான் இந்த அரசியல் நாடகங்கள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன என்பதில் யாரும் ஐயப்படவேண்டிய அவசியமில்லை. இப்படி அரசியல்சட்டத்தை முற்றிலும் மதிக்காமல், ஒன்றிய அரசினுடைய இசைக்கேற்ப நடனமாடிக்கொண்டிருக்கும் ஆளுநர்களால் மாநிலங்களின் ஆட்சிக்கு, இடையூறுகளும், தடைகளும் தொடர்ந்துகொண்டுதான் இருக்குமேயல்லாமல், கிஞ்சிற்றும் மாற்றம் ஏற்படப் போவதில்லை.

இத்தகைய குழப்பமான அரசியல் சூழ்நிலைகள் கடந்த 70 ஆண்டுகாலமாகத் தொடர்ந்துகொண்டு தான் இருக்கிறது. உயர் நீதிமன்றங்களும், உச்ச நீதிமன்றமும் இடையிடையே உரிய வழி காட்டும் நெறிகளை வழங்கினாலும் மாநிலங்களின் ஆளுநர்களோ, ஒன்றிய அரசோ திருந்துவதாகத் தெரியவில்லை. எனவே, ஆளுநர் பொறுப்பு என்பது மாநிலங்களுக்குதேவையா? அவசியம்தானா? என நாட்டுமக்கள் அனைவரும் சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்.

ஆளுநர்கள் அதிகார வரம்பில் சில மாற்றங்களைச் செய்து, ஆளுநர்களின் பணிகளை முறைப்படுத்தி விடலாம் என்றுகூட சிலர் ஆலோசிக்கக்கூடும். ஆனால், ஆளுநர் என்ற பொறுப்பு அரசியல்சட்டத்தில் இருக்கும் மட்டும், அதுவும் ஒன்றிய அரசின் சார்பாக பிரதமரின் அமைச்சரவை பரிந்துரையில்தான் குடியரசுத்தலைவர் ஆளுநர்கள் நியமிக்க முடியும் என்ற சட்ட நிர்பந்தம் இருக்கும் மட்டும், மாநில ஆளுநர்கள் இந்தக் குழப்பங்களை ஒவ்வொரு காலக்கட்டத்திலும் உருவாக்கிக் கொண்டே தான் இருப்பார்கள். எனவே, இதற்கான நிரந்தரத்தீர்வு என அரசியல்சட்ட வல்லுநர்களும், அறிவார்ந்த சமூகமும் கருதுவது ஆளுநர் பொறுப்பை அரசியல்சட்டத்திலிருந்து அகற்றிவிடுவதுதான் ஒரேவழியாக தீர்மானமாகக் கருதப்படுகிறது.

ஆளுநர் ஆற்றக்கூடிய பணிகள் இருக்குமாயின் அந்தப்பணிகளை மேற்கொள்ளுவதற்கு உரிய மாற்றங்களை அரசியல்சட்டத்தில் நாடாளுமன்றம், சட்ட மன்றங்கள் மூலம் செய்துகொள்ள முடியும். அதற்கான உரிய அரசியல்சட்டத் திருத்தங்களைச் செய்தால் தான் முடியும். எனவே விரைவில் ஒன்றிய அரசும், மாநில அரசுகளும் அதற்கான அடிப்படை முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். இல்லையெனில், “வேற்றுமையில் ஒற்றுமை” (Unity in Diversity) என்ற கோட்பாட்டிலும், “வேறுபாடுகளை மறந்து உணர்வால் ஒன்றுபட்டோம்” (Emotional Integration) என்ற கோட்பாட்டின் அடிப்படையிலும் நம்முடைய தேசியத்தலைவர்கள் உருவாக்கிய இந்திய நாட்டின் ஒற்றுமை சிதறுண்டு போகுமோ என்ற அச்சமும், கவலையும் ஒவ்வொரு குடிமகனுக்கும் (Citizen of India) உருவாகியிருக்கிறது என்பதை யாராலும் மறுக்கவோ, மறைக்கவோ இயலாது. தமிழ்நாடு முதல்வர் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்த கருத்துகளுக்கு கட்டியம் கூறும் முறையில் 23.11.2023 தேதிய “இந்து” ஆங்கில இதழில் “ஆலோசனைகளுக்குச் செவி மடுக்காத ஆளுநரின் அதிகாரத்தை மறுபரிசீலனைக்கு உட்படுத்தும் காலம் உருவாகிவிட்டது”, என்று தலையங்கம் தீட்டப்பட்டுள்ளது (UNHEEDED ADVICE - The time has come for Governor's role to be reconsidered). மக்களின் எண்ணங்களும், ஊடகங்களின் கருத்துகளும், ஆளுநரின் அத்துமீறிய நடவடிக்கைகளை எதிர்நோக்கித் திரும்பி விட்டது என்பதற்கு இதுவே சரியான சாட்சியுமாகும் - இனியும் தொடரும் என்பதில் ஐயமில்லை.

---

## சேலம் இளைஞர் அணி 2 வது மாநில மாநாடு
## இருசக்கர வாகனப் பிரச்சாரம்!

# கடலூர் கிழக்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாகப் பங்கேற்பு!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு சிறப்பு செயலாக்க திட்டத்துறை அமைச்சர், கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி வருகின்ற 17.12.2023 அன்று சேலத்தில் நடைபெறும் தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டிற்கு, அழைப்பு விடுத்து கலைஞர் மண்டலம் சார்பாக இருசக்கர வாகனப் பிரச்சார பேரணி, கடலூர் கிழக்கு மாவட்டம் சிதம்பரம், புவனகிரி, காட்டுமன்னார்கோவில் தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளைத் தொடர்ந்து, கீழ்க்கண்ட பகுதிகளுக்கு, இன்று (25.11.2023 - சனிக்கிழமை) குறிஞ்சிப்பாடி, கடலூர் தொகுதிக்குட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளுக்கும் இருசக்கர வாகனப் பிரச்சாரப் பேரணி. கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல்படி வருகைதர உள்ளது. அதுசமயம் இந்நிகழ்ச்சிகளை சம்பந்தப்பட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், இளைஞரணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திடவும்.

மேலும் இந்நிகழ்ச்சிகளில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், வார்டு கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை;r செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாநகர மேயர், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிமன்றத் தலைவர்கள், துணைத்தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் இளைஞரணி மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாகக் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**கடலூர் கிழக்கு மாவட்டத்தில் இருசக்கர வாகன பேரணி விபரம்**

| 25.11.2023 (சனிக்கிழமை) | | | |
|---|---|---|---|
| **நேரம்** | **வழி** | **நிகழ்ச்சி நடைபெறும் இடம்** | **நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் மாநகரம்/ஒன்றியம்/நகரம்/பேரூர்** |
| காலை 9.00 மணி | நெய்வேலி ஆர்ச் கேட் வடக்குத்து வழியாக | கடலூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் வரவேற்பு வடக்குத்து கன்னியாக்கோவில் பாலம் | குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றியம்<br>குறிஞ்சிப்பாடி வடக்கு ஒன்றியம்<br>வடலூர் நகரம்<br>குறிஞ்சிப்பாடி பேரூர் |
| காலை 9.15 மணி | கும்பகோணம் சாலை வழியாக | வடலூர் நான்கு முனை சந்திப்பு | குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றியம்<br>வடலூர் நகரம் |
| காலை 9.30 மணி | ரோட்டு ஆண்டிக்குப்பம், யூனியன் ஆபிஸ் வழியாக | குறிஞ்சிப்பாடி பேருந்து நிலையம் | குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றியம்<br>குறிஞ்சிப்பாடி பேரூர் |
| காலை 10.00 மணி | பெத்தநாயக்கன் குப்பம் தம்பிப்பேட்டை தோப்புக்கொல்லை வழியாக | குள்ளஞ்சாவடி அண்ணா சிலை அருகில் | குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றியம்<br>குறிஞ்சிப்பாடி வடக்கு ஒன்றியம் |
| காலை 10.30 மணி | சுப்பிரமணியபுரம் சேடப்பாளையம் அன்னவல்லி கண்ணாரப்பேட்டை வழியாக | பச்சாங்குப்பம் இரட்டை ரோடு அருகில் | கடலூர் கிழக்கு ஒன்றியம்<br>கடலூர் மேற்கு ஒன்றியம் |
| காலை 11.00 மணி | பச்சையாங்குப்பம் ஹவுசிங் போர்டு கடலூர் துறைமுகம் சாலைக்கரை வழியாக | ஹவுசிங் போர்டு வழியாக கடலூர் துறைமுகம் மணிக்கூண்டு அருகில் | கடலூர் மாநகரம்,<br>கடலூர் துறைமுகம் பகுதி |
| காலை 11.15 மணி | கடலூர் துறைமுகம் சாலைக்கரை வழியாக | கடலூர் சீமாட்டி அருகில் | கடலூர் மாநகரம்<br>திருப்பாதிரிப்புலியூர் பகுதி |
| காலை 11.30 மணி | அண்ணா பாலம் வழியாக | கடலூர் மஞ்சக்குப்பம் தலைமை அஞ்சல் நிலையம் அருகில் | கடலூர் மாநகரம்<br>மஞ்சக்குப்பம் பகுதி<br>புதுப்பாளையம் பகுதி |
| காலை 11.45 மணி | மாவட்ட மருத்துவனை சாலை வழியாக | கடலூர் செம்மண்டலம் ஜங்ஷன் அருகில் | கடலூர் மாநகரம்<br>மஞ்சக்குப்பம் பகுதி |
| மதியம் 12.00 மணி | நெல்லிக்குப்பம் சாலை வழியாக | கோண்டூர் வி.கே.ஹோட்டல் அருகில் வரக்கால்பட்டு வழியாக. | கடலூர் வடக்கு ஒன்றியம்<br>கடலூர் தெற்கு ஒன்றியம் |

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்,**
செயலாளர்
கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.